13.04.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

**SC No. 24/2016**

அ.சா.**6**

**பெயர்.திரு.**மணிகண்டன்

சாட்சி இன்று மீண்டும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிராமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் 10.30 மணிக்கு குபேந்திரன் கடைக்கு சிகரெட் வாங்க சென்றேன். அ.சா.1 கடையில் ஆறுமுகம், பிரகாஷ், குபேந்திரன், முருகன் ஆகியோர் இருந்தார்கள். அவர்கள் ஓடினார்கள். சத்தம் கேட்டு ஓடினார்கள் அவர்கள் ஏன் ஓடினார்கள் என்று எனக்கு தெரியாது. அவர்கள் ஓடினார்கள் என்பதால் நானும் பின்னால் ஓடினேன். புகார் யார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் உடனே கிளம்பிவிட்டேன். சம்பவ இடத்திற்கு தெற்கில் ஆறுமுகம் வீட்டில் இருந்து நத்தனூர் ரோடு வரையில் வீடு மற்றும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். அங்கு மாதா சிலை உள்ளது என்றால் சரிதான். வீடு இருந்த இடத்திலிருந்து அதாவது ஆறுமுகம் வீட்டில் இருந்து சம்பவ இடத்திற்கு யாரும் வரவில்லை என்றால் சரிதான். ஆறுமுகம் வீட்டிற்கு மேற்கே வடக்கு பக்கம் நோக்கி புதுப்பேட்டைக்கு ஒரு ரோடு செல்கிறது என்றால் சரிதான். அந்த ரோட்டிற்கும் ஆறுமுகம் கடைக்கும் இடையே தான் இந்த காலி மனை உள்ளது என்றால் சரிதான். காவல்துறை விசாரணையில் நான் போனேன் என்றும் அப்போது மேற்கு பக்கம் சிலரும், கிழக்கு பக்கம் 2 பேரும் ஓடியதாக சொன்னேன் என்றால் சரிதான். மேற்கு பக்கம் ஓடியது யார் என்று எனக்கு தெரியாது. இறந்த நபரையும், எதிரிகளையும் நான் அந்த சம்பவத்திற்கு முன்பு பார்த்தது இல்லை என்றால் சரிதான். அன்றும் பார்க்கவில்லை என்றால் சரிதான். பிடிப்பட்ட 2 நபர்களை காவல்நிலையத்திற்கு யார் அழைத்துச்சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. ஆறுமுகம் கடைக்கு பக்கத்தில் டாஸ்மாக் உள்ளது. அங்கு சரக்கு வாங்குபவர்கள் ஆறுமுகம் வீட்டிற்கு பின்னால் உள்ள மனைப்பிரிவு அதாவது சம்பவ இடத்தில் தான் குடிப்பார்கள். நான் சென்றபோது நிறையபேர் குடித்து இருந்தார்கள் என்றால் அப்படியெல்லாம்

இல்லை. நான் முதல் விசாரணையில் சில பேரை வைத்துவிட்டு நாங்கள் பிடிப்பட்ட இருவர்களை கெடார் காவல்நிலையத்திற்கு கொண்டு வந்து ஆஜர்படுத்தியதாக சொன்னேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் காவல்நிலையம் செல்லவில்லை என்பது எனக்கு ஞாபகம் உள்ளது. யார் யாரை வைத்துவிட்டு சென்றார்கள் என்று தெரியாது. யார் வீட்டுவிட்டு சென்றார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. இந்த சம்பவம் குறித்து எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். யார் அடித்தார்கள் எப்படி அடித்தார்கள் என்று நான் பார்க்கவில்லை. ஆறுமுகம் புகார் அளித்துள்ளார் என்றும் அவருக்கு வேண்டப்பட்டவர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.